இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 02 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 26 – ஞாயிற்றுக்கிழமை 11 ஆகஸ்டு 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 02 : Thiruvalluvar Year - 2055 - Aadi 26 - Sunday 11 August 2024 - Dak 8 Pages ₹ 5.00

## “தமிழ்ப்புதல்வன்” திட்டத்தால் மாதந்தோறும் வழங்கப்படும்

# 1,000 ரூபாய் கல்விக்கும் - உணவுக்கும் நிச்சயம் உதவும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து மாணவர்கள் உருக்கம்!

**சென்னை, ஆக. 11 -**

**“ ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தால் மாதந்தோறும் வழங்கப்படும் 1,000 ரூபாய் கல்விக்கும், உணவுக்கும் நிச்சயம் உதவும்” என்று மாணவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உருக்கமுடன் நன்றி தெரிவித்துள்ளனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவிகளுக்காக ‘புதுமைப் பெண்’ திட்டம் கொண்டு வரப்பட்டதுபோல, மாணவர்களுக்காக ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் கோவையில் தொடங்கி வைத்தார். இந்த தொடக்க நிகழ்ச்சியை அனைத்து கல்லூரிகள், பள்ளிகளிலும் மாணவர்கள் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. சில கல்லூரிகள் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் வகையில், வங்கி ‘டெபிட்’ கார்டையும் வழங்கினர். அந்த வகையில் சென்னையில் அரசு மாநில கல்லூரி, நந்தனம் கல்லூரி உள்பட கல்லூரிகளில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதில் கலந்துகொண்ட மாணவர்களிடம் தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலம் கிடைக்கும் தொகையை என்னென்ன தேவைகளுக்காக பயன்படுத்துவீர்கள்? என கேட்டதற்கு அவர்கள் கூறியதாவது: -

### பெற்றோர் சுமை குறையும்



**2ஆம் ஆண்டு மாணவர் பன்னீர்செல்வம்:** ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் மூலம் கிடைக்கும் இந்த ஆயிரம் ரூபாய் எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நோட்டுப் புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வாங்குவதற்கு இனி பெற்றோரை கஷ்டப்படுத்த தேவையில்லை. பெற்றோரின் சுமையும் குறையும். இதற்காக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



**3ஆம் ஆண்டு மாணவர் தினகரன்:** என்னுடைய 5 வயதில் என்னுடைய பெற்றோர் இறந்துவிட்டனர். இதனால் ஆதரவற்றோர் குழந்தைகள் இல்லத்தில் வளர்ந்தேன். பள்ளி படிப்பை நிறைவு செய்த பிறகு, நந்தனம் கல்லூரியில் படிக்க இடம் கிடைத்தது. சிறு வயது முதல் ஆதரவற்றோர் இல்லத்திலேயே வளர்ந்ததால், ரூ.2 ஆயிரத்துக்கு வாடகைக்கு அறை எடுத்து தங்கி படித்து வருகிறேன். இதற்காக, கல்லூரியில் படித்துக் கொண்டே பகுதி நேரமாக கேட்டரிங் பணியாற்றி வருகிறேன். தற்போது, தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி என்னுடைய சுமையை குறைத்துள்ளது. கல்விச் செலவுக்கும், உணவுக்கும்) நிச்சயம் எனக்கு உதவியாக இருக்கும்.

### பேருதவியாக இருக்கும்!



**3ஆம் ஆண்டு மாணவர் நந்தகுமார்:** மாதம் ரூ.1,000 என ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் கிடைக்கிறது. இந்த தொகையை வைத்து தேர்வு கட்டணம் உள்ளிட்ட படிப்புக்கான அனைத்து கட்டணங்களையும் செலுத்த முடியும். பெற்றோரிடம் இந்த ஆயிரம் ரூபாய் அரசு வழங்கியது பற்றி சொல்வேன். அவர்களுக்கு இந்த தொகை வேண்டும் என்றாலும் கொடுத்துவிடுவேன். கண்டிப்பாக இந்த தொகை பேருதவியாகத்தான் இருக்கும்.



**3ஆம் ஆண்டு மாணவர் பிரகாஷ் :** என்னுடைய தந்தை விவசாயி. நந்தனம் கல்லூரியில் உயர்கல்வி படிக்க இடம் கிடைத்ததால் சென்னை வந்தேன். தற்போது கல்லூரியில் விடுதியில் தங்கி படித்து வருகிறேன். என்னுடைய அன்றாட செலவுகளுக்கு குடும்பத்தினருக்கு கஷ்டத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதால், பகுதி நேரமாக பணியாற்றி வருகிறேன்.

தற்போது, தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் மாதம்தோறும் ரூ.1,000 எனக்கு கிடைக்க உள்ளது. மகிழ்ச்சியாக உள்ளது.

### ‘சீசன் டிக்கெட்’ எடுக்க பயன்படும்!



**3ஆம் ஆண்டு மாணவர் ஆகாஷ்:** அரசு கொடுக்கும் இந்த ஆயிரம் ரூபாயில், நான் வீட்டில் இருந்து மின்சார ரெயில் மூலம் இங்கு வந்து செல்வதற்கான ‘சீசன்’ டிக்கெட் எடுப்பதற்கு உதவியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், காலையில் வீட்டில் இருந்து வரும்போது, சாப்பிட முடியாது. இந்த தொகையில் காலை உணவை திருப்திகர மாக சாப்பிடுவேன். படிப்புக்கான தேவை களையும் பூர்த்தி செய்து கொள்வேன்.



**3ஆம் ஆண்டு மாணவர் கார்த்திக்:** ஏழ்மையான குடும்பத்தில் இருந்து உயர்கல்வி படிக்க சென்னை வந்துள்ளேன். தற்போது கல்லூரி விடுதியில்தான் தங்கி படிக்கிறேன். இருப்பினும், செலவுகளுக்காக பெற்றோரை கஷ்டப்படுத்தக்கூடாது என்பதற்காக கல்லூரி நேரத்துக்கு பிறகு வேலைக்குச் செல்கிறேன். தற்போது அரசே ரூ.1,000 வழங்கியுள்ளது. இதை என்னுடைய கல்விச் செலவுகளுக்காக பயன்படுத்துவேன்.

இவ்வாறு மாணவர்கள் உருக்கமுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

---

### டெல்டா மாவட்டங்களில்
## ரூ.1170 கோடியில் வேளாண் பெருதொழில் வழித்தடம்!

சென்னை, ஆக. 11 –

டெல்டா மாவட்டங்களில் ரூ.1170 கோடியில் வேளாண் பெரு தொழில் வழித்தடத் திட்ட மேலாண்மை அலகை அமைக்கும் பணியை குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை தொடங்கியுள்ளது.

இந்த அமைப்பு இந்த திட்டம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருதல், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும். மேலும் தொழில் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கையை இந்த அமைப்பு செய்யும். இத்திட்டத்தை, பேம் டி.என்., நிறுவனமும், தமிழக உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனமும் மேற்கொள்ள உள்ளன.

## குஜராத்தில் காங்கிரசின் 14 நாள் நியாய யாத்திரை!

மோர்பி, ஆக. 11 –

பா.ஜ. ஆளும் குஜராத் மாநிலத்தில் கடந்த 5 ஆண்டுகளில், நூற்றுக்கணக்கான உயிர்களை பலிவாங்கிய மோர்பி பாலம் இடிந்து விழுந்தது, வதோதரா படகு கவிழ்ந்த சம்பவம் உட்பட சமீபத்தில் நடந்த ராஜ்காட் கேம் ஜோன் தீ விபத்து உள்ளிட்ட சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தி உள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கக் கோரி காங்கிரஸ் கட்சி சார்பில் 14 நாட்கள் நியாய யாத்திரை தொடங்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் அமித் சாவ்தா, சேவா தளத்தின் தலைவர் லால்ஜி தேசாய், எம்எல்ஏ ஜிக்னேஷ் மேவானி ஆகியோர் நியாய யாத்திரை பிரச்சாரத்தை தொடங்கி வைத்தனர். இந்த யாத்திரை 350கிலோமீட்டர் நடைபெறும். வருகிற 23ம் தேதி காந்தி நகரில் நிறைவடைகிறது.

## ஒரே நாளில் 3 சரக்கு ரயில் விபத்து!

கவுகாத்தி, ஆக. 11 –

மேற்கு வங்கம், நியூ ஜல்பைகுரியில் இருந்து கதிஹாருக்கு நேற்று முன்தினம் சரக்கு ரயில் சென்றது. இந்த நிலையில், குமேத்பூர் ரயில் நிலையம் அருகே சரக்கு ரயிலின் 5 பெட்ரோல் டேங்கர்கள் தடம் புரண்டன. சரக்கு ரயில் தடம் புரண்டதால் நியூ ஜல்பைகுரி மற்றும் கதிஹார் இடையே ரயில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. இதேபோல், உபி மாநிலம் பிரயாக்ராஜ் கோட்டத்துக்கு உட்பட்ட அலிகாரில் சரக்கு ரயிலின் 2 பெட்டிகள் தடம் புரண்டன.

மேலும், கோவாவில் இருந்து கர்நாடகாவுக்கு நேற்று முன்தினம் ஒரு சரக்கு ரயில் சென்று கொண்டிருந்தது. இரு மாநிலங்களின் எல்லை பகுதியான தூத்சாகர் சோனாலியம் ரயில் நிலையங்களுக்கு இடையே ரயில் வந்த போது திடீரென தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தினால் 3 ரயில்கள் வேறு மார்க்கமாக திருப்பி விடப்பட்டது. 2 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று தென் மேற்கு ரயில்வேயின் தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி தெரிவித்தார். நேற்று முன்தினம் மட்டும் மேற்கு வங்கம், உபி, கோவா ஆகிய மாநிலங்களில் 3சரக்கு ரயில்கள் விபத்துக்குள்ளானது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

## இந்தியாவின் முன்னணி நிறுவன மோசடிகள்!

### ஹிண்டன்பர்க் விடுத்த எச்சரிக்கை!

புதுடெல்லி, ஆக. 11 –

உலகில் நடைபெறும் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் குறித்து ஆய்வு செய்யும் நிறுவனம் ஹிண்டன்பர்க். இந்நிறுவனம் கடந்த சில மாதங்களுக்கு முன் அதானி குழு நிறுவனங்கள் மீது கூறிய குற்றச்சாட்டு பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

அதானி குழுமம் பங்கு முறைகேடு, பங்கு மதிப்பை உயர்த்திக் காட்டி, அதன் மூலம் அதிகக் கடன் பெறுதல், போலி நிறுவனங்களைத் தொடங்கி, வரி ஏய்ப்பு செய்தல் உள்ளிட்ட முறைகேடுகளில் ஈடுபட்டதாக அறிக்கையில் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து, ஹிண்டன்பர்க்கின் அறிக்கை வெளியான உடனேயே, அதானி குழும நிறுவனங்களின் பங்குகளில் விலை மாபெரும் சரிவை சந்தித்தன. 86 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு அதானி குழுமத்தின் பங்குகள் சரிவை சந்தித்தன. இதனால் அதானி குழுமத்திற்கு பல ஆயிரம் கோடி நஷ்டம் ஏற்பட்டது.

இதனிடையே தங்கள் குழுமத்தின் மீதான ஹிண்டன்பர்க்கின் கூற்றுக்கள் அனைத்தும் ஆதாரமற்றவை என்று அதானி குழுமம் மறுப்பு தெரிவித்தது. ஆனால், தங்களது இந்த அறிக்கை தவறானது என்று கருதினால், அதானி குழுமம் தங்கள் மீது வழக்குத் தொடரலாம் என்று அதானி குழுமத்திற்கு ஹிண்டன்பர்க் அழைப்பும் விடுத்திருந்தது.

அதானி மீதான குற்றச்சாட்டுகளை சிறப்பு புலனாய்வு அமைப்பு விசாரிக்க கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இந்த கோரிக்கையை நிராகரித்த சுப்ரீம்கோர்ட்டு செபி விசாரணை நடத்தினால் போதும் என கூறியது. உண்மையில் ஹிண்டன்பெர்க் ஆய்வறிக்கை என்பது அதானி குழுமத்துக்கு பெரும் பிரச்சினையை உருவாக்கியது.

இந்நிலையில் ஹிண்டன்பர்க் ரிசர்ச் நிறுவனம் நேற்று தனது எக்ஸ் வலைதள பக்கத்தில், “விரைவில் இந்தியாவில் பெரிய சம்பவம் நடக்கபோகிறது..” என்று பதிவிட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஹிண்டன்பர்க் நிறுவனம் இந்தியாவின் ஒரு முன்னணி நிறுவனம் குறித்த மோசடிகள் மற்றும் முறைகேடுகளை வெளிப்படுத்தும் என்று கூறப்படுகிறது.

இந்த விவகாரம் உலகளவில் பேசுபொருளாகி உள்ளது.

---

### வக்ஃப் சட்டத் திருத்த மசோதா:

## நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைப்பு!

### ஆ.ராசா – முகமது அப்துல்லா – ஒவைசி இடம்பெற்றனர்!

*புதுடெல்லி, ஆக. 11-*

*மக்களவையில் வியாழக்கிழமை அறிமுகம் செய்யப்பட்ட வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதாவை ஆய்வு செய்ய 31 பேர் கொண்ட நாடாளுமன்ற கூட்டுக் குழு வெள்ளிக்கிழமை அமைக்கப்பட்டுள்ளது.*

*இந்தக் குழுவில் மக்களவை உறுப்பினர்கள் 21 பேரும், மாநி லங்களவை உறுப்பினர்கள் 10 பேரும் இடம்பெற்றுள்ளனர்.*

*குழுவில் மக்களவை உறுப்பினர்கள் 21 பேர் இடம் பெறுவதற்கான தீர்மானத்தை மத்திய சிறுபான் மையினர் நலத் துறை அமைச் ரிஜிஜு வெள்ளிக்கிழமை மக்களவையில் அறிமுகம் செய்தார். அந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.*

*அதுபோல, இந்தக் குழுவில் 10 உறுப்பினர்கள் இடம்பெறுவதற்கான தீர்மானம் மாநிலங்களவையில் பிற்பகலில் அறிமுகம் செய் யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

*மக்களவை உறுப்பினர்கள் ஜெகதாம்பிகா பால், நிஷிகாந்த் பு துபே, தேஜஸ்வி சூரியா, அபராஜிதா சாரங்கி, சஞ்சய் ஜெய்ஸ் வால், திலிப் சய்கியா, அபிஜித் கங்கோபாத்யாய, டி.கே. அருணா (பாஜக), கௌரவ் கோகோய், இம்ரான் மசூத், முகமது ஜாவேத் (காங்கிரஸ்), மௌலானா மொஹி புல்லா (சமாஜவாதி), கல்யாண் பானர்ஜி (திரிணமூல் காங்கி ரஸ்), ஆ.ராசா (திமுக), லவு ஸ்ரீ கி ருஷ்ண தேவராயுலு (தெலுங்கு தேசம்), திலேஷ்வர் கமாய்த் (ஐக்கிய ஜனதா தளம்), அர்விந்த் சாவந்த் (சிவசேனை உத்தவ் தாக் கரே பிரிவு), பால்ய மாமா சுரேஷ் கோபிநாத் மாத்ரே (தேசியவாத காங்கிரஸ்சரத் பவார் பிரிவு), நரேஷ் மஸ்கே (சிவசேனை), அருண் பார்தி (லோக் ஜனசக்தி ராம்விலாஸ் பாஸ்வான்), அசா துதீன் ஒவைசி (அகில இந்திய மஜ்லீஸ்) ஆகிய 21 பேர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.*

*மாநிலங்களவை உறுப்பினர்கள் பிரிஜ் லால், மேத்தா விஷ்ரம் குல் கர்னி, குலாம் அலி, ராதா மோகன் தாஸ் அகர்வால் (பாஜக), சையது நசீர் ஹுசைன் (காங்கிரஸ்), முக மது நதிமுல் ஹக் (திரிணமூல் காங் கிரஸ்), விஜய்சாய் ரெட்டி (ஒய் எஸ்ஆர் காங்கிரஸ்), முகமது அப் துல்லா (திமுக), சஞ்சய் சிங் (ஆம் ஆத்மி) மற்றும் நியமன உறுப்பினராக தர்மஸ்தாலா வீரேந் திர ஹெக்டே ஆகிய 10 எம்.பி.க்கள் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.*

*இந்த நாடாளுமன்ற கூட்டுக் குழு மசோதாவை ஆய்வு செய்து, அடுத்த நாடாளுமன்ற கூட்டத் தொடரின் முதல் வாரத்தின் கடைசி நாளில் தனது அறிக் கையை தாக்கல் செய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*‘வக்ஃப் வாரிய சட்டம் 1995-ஐ ‘ஒருங்கிணைந்த மேலாண்மை, அதிகாரமளித்தல், திறன் மேம்பாடு சட்டம் 1995’ என்று பெயர் மாற்றம் செய்யவும், வக்ஃப் வாரியத்தில் முஸ்லிம் பெண்கள் மற்றும் முஸ்லிம்கள் அல்லாத இரண்டு நபர்களை உறுப்பினர்களாக இடம்பெறச் செய்வது, வாரிய நிலங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டாயப் பதிவு செய்வது, வக்ஃப் நிலமா, இல்லையா என்பதை மாவட்ட நிர்வாகம் மற்றும் நீதிமன்றங்கள் முடிவு செய்ய அதிகாரம் உள்ளிட்ட பல்வேறு மாற்றங்களை சட்டத்தில் மேற்கொள்ளும் வகையில் இந்த சட்டத்திருத்த மசோதாவை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.*

*இந்த மசோதா எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே மக்களவையில் வியாழக்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது. இதை ஆய்வு செய்ய தற்போது நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப் பட்டுள்ளது.*

---

### தமிழகத்தின்

## 6 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!




சென்னை, ஆக. 11 –

சென்னை, வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

11.08.2024: கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஈரோடு, திருப்பூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், கரூர், அரியலூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

12.08.2024: கோயம்புத்தூர் மற்றும் தேனி மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மலைப்பகுதிகள், திருப்பூர், விருதுநகர், மதுரை, திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

13.08.2024: கோயம்புத்தூர் மற்றும் தேனி மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும்; தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மலைப்பகுதிகள், திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம், பெரம்பலூர், மதுரை, விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

14.08.2024: கோயம்புத்தூர் மற்றும் தேனி மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஓரிரு பெய்யவாய்ப்புள்ளது. திருப்பூர் திண்டுக்கல், இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.